DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.37/2025

PW - 8

| | | |
|---|---|---|
| Name | : | செங்கோடன் (Lw - 9) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **Date : 12.06.2026**

நான் தற்போது எலச்சிபாளையம் காவல் நிலையத்தில்க காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 07.11.2024ம் தேதி நான் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது சிங்களாந்தபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அடிதடி தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த வாதி தினேஷ் என்பவரின் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து மேற்படி புகார் வாக்குமூலம் பெற்று மனு ரசீது எண்.84/2024 ன் கீழ் மனு ரசீது வழங்கினேன். மேற்படி புகார் வாக்குமூலத்தின் பேரில் முதற்கட்ட விசாரணை செய்து எதிரி மீது கடந்த 10.11.2024ம் தேதி நிலைய கு.எண்.88/2024, BNS 296(b), 118(1), 351(3) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை தனது புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடுசெய்யப்படுகிறது**.)**

அன்றைய தினமே காலை 07.00 மணிக்கு சம்பவ இடமான சிங்களாந்தபுரம் காந்திநகரில் உள்ள பேபி வீட்டீற்கு அருகே சென்று சாட்சிகள் அதியமான், மனோபிரியா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பாா்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னா் சாட்சிகள் தினேஷ், சந்திரபாபு, பச்சமுத்து, பேபி, அதியமான், மனோபிரியா ஆகியோர்களை விசாாித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னா் அன்றைய தினமே காலை 09.30 மணிக்கு ஆண்டகலூர்கேட் மேம்பாலம் அருகே நின்று கொண்டிருந்த ஆஜர் எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

கடந்த 15.12.2024ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த சிங்களாந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் திரு.ரங்கோத்தமன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். பின்பு அன்றைய தினமே வாதிக்கு சிகிச்சை அளித்த நாமக்கல் அரசு மருத்துவ கல்லூாி மருத்துவமனை மருத்துவர் திரு.சீனிவாசன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். வாதிக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என காயச்சான்றிதழ் வழங்கப்பட்டதால் இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை BNS 296(b), 118(1), 351(3) என்பதிலிருந்து BNS 296(b), 118(2), 351(3) ஆக சட்டபிரிவுகளை மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(**சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ**.**சா**.**ஆ**8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது BNS 296(b), 118(2), 351(3) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவமானது எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் 07.11.2024ம் தேதி மாலை 03.15 மணிக்கு நடைபெற்றது. நான் வாதியிடம் எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பெற்றேன் என்றால் 07.11.2024ம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு பெற்றேன். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 னிடம் எங்கு வைத்து எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பெற்றேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் மனு ரசீது இரவு 08.00 மணிக்கு வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பேளுக்குறிச்சி காவல்நிலையத்திலிருந்து சிங்களாந்தபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுமார் 30 நிமிடத்தில்

சென்றுவிடலாம் என்றால் சரிதான்.

புகார் வாக்குமூலம் பெற்று 4 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள நிலையில் மேற்படி காலதாமதத்திற்காக காரணத்தை எனது முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அ.சா.ஆ.1 புகாரில் வாதியை தவிர பிற சாட்சிகள் சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கத்தியை தூக்கி எரிந்துவிட்டதாக கூறியதால் அதனை கைப்பற்றவில்லை. உண்மையில் எதிரி கத்தியை தூக்கி எரிந்துவிட்டதாக கூறியிருந்தால் நான் எதிரியை அழைத்து சென்று கத்தியை கைப்பற்றி இருப்பேன் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

அ.சா.1 தனது புகாரில் சம்பவமானது தனது சித்தி பேபி வீட்டிற்கு அருகில் சம்பவம் நடந்ததாகத்தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பேபி வீட்டிற்கு அருகில்தான் ஓடை உள்ளது. அங்கு தான் சம்பவமானது நடைபெற்றது. சம்பவ இடமானது பேபி வீட்டில் இருந்து சுமார் 70 அடி தூரத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே குடியிருக்கும் செல்வராஜ், பெரியசாமி ஆகியோரை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் அங்கு விசாரிக்க சென்றபோது மேற்படி நபர்கள் சம்பவ இடத்தில் இல்லை. மேற்படி விபரத்தை எனது இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

சூரிகத்தியும் பட்டன் கத்தியும் வேறு வேறு வகை கத்தி இல்லை என்றால் சரிதான். அ.சா.1 தனது புகாரில் எதிரி தனது அண்ணனை தான் குத்த சென்றதாகவும் தான் தடுக்க சென்றபோது தன்னை குத்திவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. வாதிக்கு ஏற்பட்ட காயத்தை குறித்து எக்ஸ்ரே எதையும் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எதிரி மீது கொண்டிருந்த முன் விரோதத்தின் காரணமாக கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி வாதியை கத்தியால் குத்தி இருந்தால் மேற்படி கத்தியை நான் கைப்பற்றி

நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றாலும் எதிரி கத்தியை பயன்படுத்தவில்லை என்பதால் தான் கத்தியை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**